


**What is common in the 4th Article of each vocation?**

1. Living the spirit of the Holy Family and be visible witnesses.
2. Our call to continue the mission of Christ – evangelization.
3. To promote communion and commit to build a new society.
4. Be motivated by the Spirit of God Alone always.
5. Discern the signs of the times and be relevant to the needs of the society of today.
6. Become visible signs of communion through collaboration and communication.

**Fr.Jacob Nicholas**

# நாம் மறவோம்...



புன்சிரிப்பும் புதுப் பொலிவும் உம் வதனம் தவழ
எம்மிடையே பவனிவந்த எம் மூத்த சகோதரியே
உம் அழைப்பின் நோக்கம் இவ்வுலகில் நிறைவெய்தி
அழைத்திட்டார் தம் அருகில் எம்பெருமான் புகழ்பாட
இறை அரசு பரப்ப ஆன்மாக்களை தேடிச்சென்றீர்
கல்விப் பணியால் மாணாக்கரை இறைவனிடம் இட்டுச் சென்றீர்
புத்திமதிகள் பல புகட்டி புண்பட்ட உள்ளம் ஆற்றி
நீர் செய்த சேவைகண்டு உளம் குளிர்ந்தார் எம் பரனார்
உம் கரமதனால் உருப்பெற்ற இளம் உள்ளங்கள்
உம்முடன் சேர்ந்துழைந்த ஆசிரிய சகோதரர்கள்
பெற்றனர் பல வாழ்க்கைப்பாடம் - உம்
வாழ்வுதனில் வெளிப்பட்ட பண்புகளால்
கஸ்ரதுன்பம் பாராது காடும் முள்ளும் நோக்காது
மக்களோடு மக்களாய் இடம்பெயர்ந்து சென்றாலும்
இன் முகத்துடனே எல்லாரையும் அரவணைத்து
இறை நம்பிக்கையில் உறுதிகொள்ள வேதம் உரைத்தீர்
கலகலப்பான உன் சுபாவம் காயப்படுத்தாத உம்பேச்சு
பயனுள்ள உம் சேவை சபைப்பற்றுள்ள உம் வாழ்வு
அத்தனையும் நினைக்கையிலே நீர் நிலை கொண்டு வீட்டீரம்மா.
எமைவிட்டு பிரிந்து நிலைவாழ்வை அடைய – நீர்
தேவனிடம் சென்றுவிட்டீர் நம்புகின்றோம்
சகோதரமே எமக்காய் நீர் பரமனிடம்
ஏறெடுப்பீரென்று செபித்து நிற்கின்றோம் உம் ஆன்ம
சாந்திக்காய்.

சுபாஜினி ஞானப்பிரகாசம்

## My journey in the Community

I would like to share my lived experience in the community at Sathurukondan. Really it's not a convent but a center. Today as I reflect about my five months being here I am very happy to look back at my lived experiences with the Children with special needs and my sisters in this community.

During these five months I was have given the opportunity to share my gifts and talents for the good of our children and to experience God in and through them. I really enjoyed while spending my time with them in school and other activities. At the beginning it was difficult for me to understand them but gradually I trained myself to accept them as my brothers and sisters thinking that we are created in the image and likeness of God. This kind of mentality helped me to mingle with them and understand them as they are. Being with these children I am grateful to God that HE has blessed my life. These children's way of life challenged me to love each and every one. The way the staff takes care of them challenged me to commit myself fully and to be faithful to God. Their thirst to hear the hymns and the way they pray inspired me to deepen my relationship with God. They are in need of our love, care, concern and compassion. This year of mercy calls me to be patience and kind towards our children with special needs .

In the community I learned to co-operate with my sisters in sharing my gifts and talents for the good of our community. I was also enriched by the life giving sharing of my sisters and their commitment. It helped me to understand and accept eachone's uniqueness. The guidance and support of our sisters and exemplary life challenged me to change my way of life to give myself for others and to share my ideas to live my community life effectively. The evaluation and the discussion held each month in the community by the councilor incharge of the community made a path to see the areas where I need to grow and evaluate my personal life. The open sharing by the community sisters helped me to check myself and my strength and limitation as well as the reality of the religious life. I'm so grateful to our sisters for this given opportunity. This opportunity

made me question my self and to be firm in my vocation. It also made me feel that I am in the process of my formation that I can improve myself every moment of my life. The events that took place when I was here, such as; closing of the convent and thanksgiving Mass at jeyanthipuram, commitment of lay Associates and the feast of our Founder made me feel our Family Spirit of COMMUNION and share our love with each one. The preparation to create a Cosmic Consciousness helped me to connect myself with the divine within and around me.



In general, I'm grateful to God and sisters for this given opportunity where I learnt to see the reality of the community living. I am happy for all challenges which moulded me to be who I am now. I'm saying Good bye while cherishing my good memories in the community. A BIG THANKS to ONE and ALL.

***Miss. Lawarani.***
***2nd year novice***

# நாம் தேடும் அமைதி

அமைதி என்றால் என்ன? என்பதற்கு வினாத்தொடுத்தால் அமைதிக்கு பலவிதமான அர்த்தம் கொடுக்கலாம். ஆனால் உண்மையாகவே இந்த அமைதி என்றால் என்னவென்று சற்றுச் சிந்தித்து பார்ப்போம். இந்த அமைதிக்கு இரு வகையான அர்த்தம் கொடுக்கலாம் ஒன்று அக அமைதி மற்றையது புற அமைதி.

இன்றைய உலகை நாம் சற்று உற்று நோக்கிப் பார்த்தால் நாம் அனைவரும் இந்தஉலகில் வெவ்வேறான பிரச்சனைகளையும், கஸ்ரங்களையும் சுமந்து நிற்கின்றோம். இதற்கெல்லாம் காரணமாக இருப்பது நமது உள்ளத்தை உலகமயமான வாழ்க்கைக்குள் தொலைத்து நிற்பதே ஆகும். இந்த இலௌகீக உலகில் பொன், பொருள், பட்டம், பதவி, பெருமை, பணம் ஆகிய அழிந்துபோகும் பொருள்களை பொன்னாடை போன்று எம்மிலே போர்த்திக் கொண்டு அமைதியையும் அதற்குள்ளேயும் அபகரித்துக் கொள்ள அலைந்து திரிகின்றோம்.

நாம் இந்த உலகில் எவ்வளவு செல்வம் சேர்க்கின்றோமோ அவ்வளவிற்க்கு நாம் நமது அமைதியை இழக்கின்றோம். ஆனால் மெய்யான அமைதி என்பது இந்த உலகில் இல்லை. இந்த அமைதியை நாம் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றால் இந்த உலகில் உள்ள சுகபோகங்களில் இருந்து விடுபட வேண்டும். இந்த உலகம் ''வெறுமன தெய்வலோகத்தின் நிழல் பிரதியே'' என்று மெய்யியலாளர் பிளேற்றோ (PLATO) கூறுகின்றார். இந்த விஞ்ஞான உலகில் நாம் செல்வங்களைச் சேர்த்துக் கொள்வதைப் பற்றி கவலைப்படுகின்றோமே அன்றி அமைதியை எவ்வாறு பெறவேண்டும் என்பதைபற்றிச் சிந்திக்க மறக்கின்றோம்.

நம் சிந்தனை நம்மை வாழவைக்கின்றது என்பதை மறக்கின்றோம். இதைத் தான் மெய்யியலாளர் றேனே டெக்கட்டும் (RENE DESCARTES) இவ்வாறு சொல்கின்றார், ''நான் சிந்திக்கின்றேன் அதனால் வாழ்கின்றேன்.''

ஆகவே நம் சிந்தனைகள் நேரிய பாதையில் இருந்தால் நம் வாழ்க்கை அமைதியும், அர்த்தமும் உள்ளதாக அமையும், நாம் வாழ்கையில் அந்த நிலையில்லாத செல்வங்களையல்ல நிலையான

செல்வமான அந்த எல்லாம் வல்ல ஆண்டவரின் அமைதியையே தேடுவோம். இதைத்தான் "ஒருவன் உலகம் எல்லாம் தனதாக்கிக் கொண்டாலும் தனது ஆன்மாவை இழப்பானெனில் அதனால் என்ன பலன்" என்று புனித இக்னேசியல் லோயல்லா கூறுகிறார்.

இந்த கருத்துக்களுக்கு அமைவாக இந்த உலகத்தில் நமக்கென்று எதுவும் நிலையில்லை. அந்த நிலையான இந்த உலகம் தரமுடியாத கிறிஸ்து விட்டு சென்ற அமைதியையே நாம் சுவிகரித்துக் கொள்ள வேட்கை கொள்ள வேண்டும். இதனால் நாம் தேடும் அமைதி நிச்சயம் கிடைக்கும். இதனையே தான் எம் நல்ல பிதாவும் இந்த உலகு அனைத்தும் குப்பையிலும் குப்பை. இறைவன் மாத்திரமே என்கின்றார்.

அ. டொறன்சியா
இரணைமாதா நகர்

## Sharing our togertherness

17th .05.2016 was a pleasant day for our community. The catholic teachers and the 23 students from Bandarawella Little flower school came to our convent to visit us and to have an experience of happiness that we enjoy with the Lord and of the creation. We gave them a warm welcome. First we had a friendly chat with them and then we shared about our founder's life, the purpose of our being together in this community. This was an opportunity for the postulants to introduce themselves to the crowd. We had entertainments to make them feel at home. The students also participated by performing some play lets. At the end we had silent adoration before the blessed sacraments. After that we took them round to see the places and they enjoyed the beauty of creation. They showed their einterest to come again and to stay with as.

*Sr.Jeyaseeli .R*

## We are with you...



We sisters Dymphna and Mary Ranee like to share what we had lived during our holidays in our home country Sri Lanka. We felt quite happy to meet you and experience to some extent –your life .We have received encouragement and strength to go ‘Forward’ in our Missionary life. Thank you very much sisters .We have been touched by your zeal, and the way you are engaged in your various ministries. We were able to feel the ‘family spirit’ found among yourselves.

It was a blessing indeed, to have participated in the annual retreat in Diyatalawa with a group of our sisters. That was enrichment to us. The atmosphere of silence helped us to go deep into ourselves and to experience the God within us. The call to’ wake up’ was a challenge to see in and outside of ourselves as to which way we have to be awakend , and to continue our journey. We were helped to connect ourselves with the whole of creation and our creator, utilizing especially the Mass media.

We were touched too, by the commitment and availability of our Sisters Aquinas and Stella –for our family.

This year of mercy is asking us to be merciful towards all human beings, to the entire creation- animate and inanimate. We try our best to be merciful towards the persons who are next to us.- and to all the others without any discrimination of any kind! This is the way we shall be able to see the face of our Heavenly Father who is Mercy and Compassion

himself (herself).The different methods used were helpful, to reflect and pray better. We have been shown the "Downward mobility" lived by Jesus, and to follow the same bath in our lives. The Pope's Exhortation and our General Leader Ana Maria's letters are life- giving and challenging us to "wake up" and to get out of our' comfort Zones'.

Everything –Every event has been a gift and a grace to continue our journey of our 'life and mission'. In these we are one with you. "Thank you.

***Srs. Marirani & Dymphna***

**Dear sisters,**

**On behalf of my family I would like to express my sincere thanks and gratitude to Sr.Christa, her Council and all the sisters who were present at my beloved father's funeral, for the letters, messages of sympathy over the phone, and prayerful support, my family and I received at that time. A special thank you to all of you who traveled all the way far and near, to be present with us and at the last moment of burial of my beloved father.**

*With renewed gratitude and affection*
*Sr.Prothmary.*

# தியானத்தின் அனுபவங்கள்

இறைசக்தியுடன் இணைந்து
கொண்டிருக்கும்
முழுப்பிரபஞ்சத்துடன்
பயணம் செய்யக்கூடிய
பொருத்தமான ஊடக
விளக்கங்கள்



நீங்கள் பெற்றுக் கொண்ட
அருளுக்கேற்ப, அறிவுரைக்கேற்ப
வாழுங்கள்.. உள்ளத்தில்
அனுதினமும் ஒலிக்கும் குரல்.

அர்ப்பண வாழ்வின்
மேன்மையை மென்மேலும்
புரிந்து சிந்தித்து
புதுப்பித்து வாழ கிடைத்த
ஆழமான சிந்தனைகள்.

செபமொன்று வாழ்வொன்று
என்ற நிலையில் இருந்து
என்னை விடுவித்து இரண்டும்
ஒன்றிணைந்து போக
வேண்டியதன் காத்திரத்தை
அடிக்கடி சிந்தித்து விழிப்புடன்
செயலாற்ற .........

அனைவருடனும்
அன்பு,கனிவு, இரக்கம்
ஆகிய பண்புகளை என்னில்
வளர்த்துப் பயன் பெற வழி
சமைத்தது

***Sr. Emiliana***

# அன்பு

அன்பு என்றால் என்ன?

காதல் அன்பு, தியாக அன்பு, என்று பிரித்துப் பார்ப்போம். இனிமை மிகு பாடல் காதல் அன்புக்கு ஊர் உதாரணம். இயேசுவின் வாழ்வு முழுவதிலும் வெளிப்படுவது தியாக அன்பு.

ஓர் ஆண் ஒரு பெண்ணையும் ஒரு பெண் ஓர் ஆணையும் தெரிந்தெடுக்கையில் காதல் அன்பு உதயமாகிறது. காதல் அன்பு கனித்து திருமணம் ஆனபின் ஒருவர் மற்றவருக்காகத் தன்னைத் தியாகம் செய்கிறார். இந்த அன்பின் கனியே மக்கட்பேறு. பிள்ளைகளுக்காகப் பெற்றோரும் பெற்றோருக்காக பிள்ளைகளும் தங்கள் தியாக வாழ்வால் அன்பு நிறை குடும்பமும் அன்பான சமுதாயமும் கட்டி எழுப்பப்படுகின்றது.

அன்பான குடும்பத்தில் இருந்து இறை அன்பு பிறக்கின்றது. இறை அன்பால் ஆட்கொள்ளப்படும் ஒருவர் இறைவனைத் தேட ஆரம்பிக்கின்றார். தேடி அலையும் ஆன்மாவுக்கும் ஆண்டவனுக்கும் இடையே ஏற்படும் காதல் அன்பு. இந்த அன்பு எவ்வளவு வலிமை வாய்ந்தது என்றால் இது வரை தான் உயிருக்குயிராய் அன்பு செய்த அருமையானவர்களையும் உலகுசார் ஆசைகளையும் அறுத்தெறிய முடிவெடுக்கின்றார்.

இறைவன் மட்டுமே போதும் என்ற மனநிலையோடு அவரைப் பற்றிக்கொள்ளத் தடையான பற்றுக்களைத் துறந்து புறப்படுகிறார். தன்னையே பற்றிக் கொண்ட பக்தனை இறைவன் கரம்பிடித்து நடத்திச் செல்கின்றார்.

திருக்குடும்பச் சபையைத் தேர்தெடுக்கும் ஒருவர் கண்ணால் காணாத இறைவனையும், இறைவனைக் காட்டும் அடுத்தவரையும், படைப்பு அனைத்தையும் அன்பு செய்வதன் மூலம் பாரிய குடும்பத்தைக் கட்டியெழுப்ப தன்னை முழுவதும் அர்ப்பணிக்க முன்வருகிறார்.
காலப்போக்கில் தான் தெரிந்து கொண்ட நிலையில் தியாக அன்பு குறைய துறந்து விட்ட குடும்பத்தை, வீட்டை, பொருளை, படிப்பை, பட்டம் பதவியை பற்றிப் பிடிக்க ஆரம்பிக்கிறார். “பாரிய குடும்பத்தைக் கட்டியெழுப்ப” என்ற மன நிலை மாற்றமடைகிறது.
இப்போதும் இறைவன் மட்டும் போதும் என்ற நிலை எங்கே?

சிஸ். மேரி எட்விஜ்

# பயணங்கள் நிறைவேற ....



பயணங்கள் பல வகை. Bus பயணமா? Train பயணமா? Plane பயணமா? ஊர் சுற்றும் பயணமா? எதுவுமே இல்லை. இது ஒரு உள்ளத்தை சுற்றிய பயணம். Ticket எடுக்காத பயணம். பணச்செலவு இல்லாத பயணம். நேரச் செலவு மட்டுமே.

பயணத்தில் பல தரிப்பிடங்கள். தரிப்பிடங்களில் பல சந்திப்புக்கள். பல சந்திப்புக்களில் சில சிந்திப்புக்கள். சிந்திப்புக்களில் உள்ளத்தை உலுக்கியவை. …..

பகலில் கொளுத்தும் வெயில். இரவில் கொட்டும் பனி.. ஆனால் பயணம் தடைப்படவேயில்லை.போய்க் கொண்டே இருந்தது. கேட்கப்பட்ட வேண்டுகோள் ‘‘வலையை ஆழத்தில் போடு’’. வழிகாட்டியோரின் நெறிப்படுத்தல்கள். உள்ளத்தின் ஆழத்தில் போடப்பட்ட வலையில் சிக்கியவை ஏராளமான தில்லுமுல்லுகள் மட்டுமல்ல பல பவளப்பாறைகளும். அத்துடன் அழகுபடுத்தி பூதம் காத்தது போல வைத்திருக்கும் பல அசிங்கங்கள்….. அவற்றின் விளைவினால் ஏற்பட்ட உள்ள உடைவுகள். …..

எல்லாவற்றையும் காட்சிப் பொருளாக்குவது கடினம். எனினும் இரண்டொரு சிந்தனைகள்.

‘‘ ஏரியின் ஆழம் மட்டும் மீனுக்குத் தெரியும். ஆனால் ஆண்டவனுக்கோ சமுத்திரத்தின் ஆழமே தெரியும். அனைத்தையும் அறிந்தவன் ஆண்டவன். அவன் ஒருபோதும் கண் அயர்வது இல்லை. அந்த ஆண்டவனை அருகே அமர்ந்து அவனுடன் கரங்கோர்த்து வாழ்வதில் விழிப்புணர்வு.

விழிப்புணர்வின் வெளிப்பாட்டில் தெளிவடைந்தவை. ‘‘பால் நினைந்தூட்டும் தாய் மறந்தாலும் நான் அவர் மடி மேலே…’’ என்ற நம்பிக்கை வரிகள் வாழ்க்கையின் சவால்கள், எதிர்நீச்சல் போட்ட

தருணங்கள், முட்டிய மோதல்கள், வெட்டுக்கள் பட்ட போது வந்த வடுக்கள், நடந்ததை மீட்டுப்பார்த்தால் வந்த கசப்புணர்வின் உரசல்கள், உறவு முறிந்த நிலைகள், ஓரங்கட்டப்பட்டு ஒதுங்கியிருந்த தருணங்களில் ஆட்டிப்படைத்த தனிமையின் உச்ச நிலைகள்……..

இவைகள் இத்தனையிலும் ஆண்டவனின் இரக்கத்தின்



இறுக்கமான பிடிகள் ''நான் அவர் மடி மேலே…. என்ற வார்த்தைகள் வாழ்க்கைக்கு சுவையூட்டின.

கருவில் கலந்த துணையவன் கைவிடவே மாட்டான்.
உயிரில் கலந்த உறவு அவன் மறக்கவே மாட்டான்.
உருவில் கலந்த அழகு அவன் அரவணைத்துக் கொள்வான்.
உணர்வில் கலந்த சுகம் அவன் எனக்கு எல்லாமாய் இருப்பான்.
இவைகளை வாழ்க்கையோடு இணைத்தேன். வாழ்வின் இலட்சியம் உள்ளத்தோடு ஒட்டிக்கொண்டது.

''தொடரும் வாழ்வு துணிவுடன் தொடரட்டும். இடர் பல வரினும் இறை முகம் நோக்கட்டும்''

பயணங்கள் நிறைவேற இறைவா! நீயே பாதையாக இருந்து விடு.

**A Seeker**

# வேண்டாம் போதை;
# நடப்போம் நல்ல பாதையில்

'போதை நல்வாழ்வின் பாதையை மாற்றிடும்' என்பதற் கிணங்க இன்று தினசரி பேசப்படும் பொருளாக மட்டுமன்றி உலகள வில் உருவெடுத்து நிற்கும் பிரச்சினை யாகவும் போதைப் பொருள் மாறியுள்ளது. கடந்த மூன்று தசாப்தங்களாக போரின் ஆக்கிரமிப்பினால் சீர்குலைந்து போயிருந்த யாழ்ப்பாணம் அதேபோன்று இன்னொரு பயங்கர மான ஆபத்தை எதிர்நோக்கி வருகின்றது என்பதை யாராலும் மறுக்கமுடியாது. இப்போதைப் பொருள் பாவனையானது ஆரம்பத்தில் போதை ஏற்றிக் கொள்வதற்காகவும், பொழுது போக்கிற்காகவும், விளையாட்டுக் களில் ஈடுபடும் போதும் விரக்தி, அறியாமை, உளவியல் பிரச்சினை போன்ற சந்தர்ப்பங்களில் உள்ளெடுக்கின்றனர். பின்னர் இதற்கு அடிமையாகின்ற தன்மையும் இடம்பெறுகின்றது. இந்தப் போதைப்பொருட்களில் மதுபானம், புகையிலை, அபின், கஞ்சா, பான், மசாலா, ஹெரோயின், போதை தரும் ஏனைய பல வகையான பொருட்கள் காணப்படுகின்றன. வரலாற்று ரீதியில் நோக்குமிடத்து போதைப்பொருள் பாவனையானது தொன்று தொட்டே இருந்து வந்துள்ளதை அறியமுடிகின்றது. சில சந்தர்ப்பங்களில் இவை ஔடதமாகவும் பாவிக்கப் பட்டுள்ளது. இலங்கையின் திறந்த பொருளாதாரக் கொள்கை, திரைப்படங்கள், சுற்றுலாப் பிரயாணிகளின் வருகை என்பன போதைப் பொருட்கள் நாட்டினுள் வர வழி வகுத்தன. போதைப் பொருளானது வர்த்தகரீதியில் உலகெங்கும் சந்தைப் படுத்தப்படுகின்றது. அநேகமாக சட்டவிரோத கடத்தல்கள் மூலம் இவ்வர்த்தகம் இடம் பெறுகின்றது. கூடுதலாக ஆப்கானிஸ்தான் போன்ற நாடுகளில் உற்பத்தி செய்யப்படுகின்ற போதிலும் இலங்கையானது வர்த்தகமையத்தில் அமைந்துள்ளதன் காரணத்தினால் இதன் கடத்தல்களுக்கு முக்கிய இடமாக அமைந்துள்ளது. அதிலும் யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் பெரும்பாலும் பள்ளி மாணவர்களையும் வளர்ந்து வரும் இளம் சமுதாயத்தையும் இலக்கு வைத்தே இவை கடத்தப்படுகின்றது. சிறுவர்கள், பெரியோர்கள், பெண்கள், விளையாட்டு வீரர்கள் என

வேறுபாடின்றி போதைப் பொருள் பாவனைக்கு உள்ளாகின்றனர். போதைப்பொருள் பாவனையானது தனிமனிதன், குடும்பம், சமூகம், நாடு என பல படிகளிலும் பாதிக்கின்றது. ஒட்டு மொத்தத்தில் மக்கள் சமுதாயத்திற்கும் ஆரோக்கியத்திற்கும் உலக அளவில் எழுந்துள்ள சவாலாக இது மாறியுள்ளது. நாட்டில் இன்று வருடந்தோறும் புகைத்தல் மதுபானப் பாவனையால் கிட்டத்தட்ட நாற்பதாயிரத்திற்கு மேற்பட்டோர் உயிரிழப்பதாகக் கூறப்படுகின்றது. இதனால் 35000 த்திற்கு மேற்பட்டோர் விதவை களாக்கப்படுவதுடன் 70,000 த்திற்கு மேற்பட்டோர் அநாதை களாக்கப்படுவதாகவும் செய்திக ளில் அறியமுடிகிறது. போதை எனும் அரக்கன் மனிதனின் நல்வாழ்விலும், புரிந்துகொள்ளும் தன்மையிலும், திறமையிலும் விளைவை ஏற்படுத்தும். இதன் விளைவாக உடற்சோர்வு, மனத்தளர்வு, தன்னம்பிக்கை யின்மையையும் ஏற்படுத்தும். போதையின் கோரப்பிடியில் அகப்பட்டவர்கள் அஞ்சாமல் பாலியல் குற்றங் களிலும் அதனோடிணைந்த நோய்களுக் கும் உள்ளாகின்றனர். போதையின் பிடியில் அகப்பட்ட வரிற்கு அன்பு, அரவணைப்பு, வழிகாட்டல் இல்லாமல் குடும்பத்தில் விரிசல் ஏற்பட்டு வாழ்க்கை கேள்விக் குறியாகி அவசியமற்ற இறப்பு வரை தொடாந்து செல்கின்றது. உலகளாவிய ரீதியில் போதைப் பொருள் வியாபாரம் மற்றும் பாவனையை கட்டுப்படுத்த ஐ.நா நிறுவனமானது உலகெங்கும் செயற்பட்டு வருகின்றது. அத்துடன் 1897 ஆம் ஆண்டில் இருந்து ஜூன் 26ம் திகதி போதைப் போருள் ஒழிப்பு தினமாகவும் பிரகடனப்படுத்தியும் உள்ளது. இலங்கையில் போதைப் பொருள் வியாபாரம் மற்றும் கடத்தல் என்பவற்றை கட்டுப் படுத்த பல நிறுவனங்கள் இயங்குகிள்றன. பொலிஸ் திணைக்களம, சுங்கத்திணைக் களம், போதைப் பொருள் தொடர்பான தேசிய அதிகார சபை, ஆபத்தான ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபை என்பன முன்னின்று செயற்படுகின்றன. இதற்கும் மேலாக ஜனாதிபதியின் அதீத அக்கறையுடனும் அவரது நேரடிக் கண்காணிப்பிலும் போதைத் தடுப்பு செயலணிகள் செயற்பட்டு வருகின்றமையும் குறிபட்பிடத்தக்கது. அத்தோடு மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள் மற்றும் ஏனைய அமைப்புக்களும் போதைபொருள் பாவனையைகட்டுப்படுத்துவதற்காக

முன்னின்று செயற்படுகின்றன. போதை ஒழிப்பை மேற்கொள்ள இளையோர் முதல் பெரியோர் வரை சகலரினதும் ஒத்துழைப்பு அவசியமாகின்றது. போதைப் பொருள் வியாபாரிகளை கைது செய்யும் போது பொலிஸாருக்கு முழு ஆதரவையும் வழங்க வேண்டும். போதைபொருள் ஒழிப்புக்கு பல சட்டங்கள் மட்டும் இருந்தால் போதுமானது அல்ல. வெறுமனே சட்டங்களால் மட்டும் இதனைக் கட்டுப்படுத்தி விடமுடியாது. எனினும் சட்டங்கள் மறுசீரமைக்கப் படுவதோடு மேலும் அவை வலுவானவையாக இருத்தல் வேண்டும். இதன் மூலமே போதைப்பொருள் பாவனையை ஒழித்து வெற்றிகரமாக புதிய போதையற்ற சமூகத்தை உருவாக்க முடியும். சமூகத்தின் பங்காளி என்ற வகையில் எதிர்கால சமூகத்தின் ஆரோக்கியத்தின் கரிசனையைக் கருத்திற் கொண்டு போதைப் பொருள் பாவனையில் ஈடுபடு பவர்களையும், வியாபாரத் தில் ஈடுபடுபவர்களையும் சட்டத்தின் முன்னிறுத்தி புதிதாக அடிமையா கின்றவர்களை அதிலிருந்து விடுவித்து ஆரோக்கியமாக நீண்ட ஆயுளுடன் வாழ்ந்து சமூகத்திற்கு சிறந்தவர்களாக மாற்ற முன்னின்று வெற்றிகரமாக உழைப்போம், எதிர் காலத்தைப் பாதுகாப்போம். வேண்டாம் போதை என நடப்போம் நல்லபாதையில் போதையைத் தவிர்த்தால் நீயும் புனிதனே.

தொகுப்பு:
தாக்சாயினி செல்வகுமார்
கலாசார உத்தியோகத்தர்.
ஆதாரம்: வீரகேசரி



## வங்காலையில் பூத்த சகோதரி

வங்காலை வளர்த்தெடுத்த வளர்மதியே
லம்பெட் பரம்பரையின் ஒளிவிளக்கே
அழகிகளில் ஒருத்தியம்மா நீ
நிமிர்ந்த நடையும் நேர் கொண்ட பார்வையும்
கல்வி அறிவும் கள்ளமிலா மனமும்
யானைவரும் முன்னே மணியோசை வரும் பின்னே என்பது போல்
நீங்கள் வருமுன்னே செருப்பின் ஒசை கேட்கும்.
மகிழ்வான துறவியம்மா நீ
அடுக்கடுக்காய் கையில் செபப் புத்தகங்கள்
அத்தனையும் செபித்து செல்வீா் பாடசாலை
நீங்கள் வன்னியில் வாழ்ந்தகாலம்
இளைஞர்க்கு வளமான காலம்
போர்க் கால போராட்டத்தில்
பள்ளிச் சிறார்களை பாசமாய் பாதுகாத்தீா்
போர்க்கால உணர்வு பொங்கிய நாட்களில்
பாதுகாத்தீா் எம் இளைஞர்களை
ஒய்வு பெற்ற பின் முன்பள்ளி சிறாரின்
முதுகெலும்பானீா்
ஆடலாலும் பாடலாலும்
அணைத்தெடுத்தீா் சிறார்களை
ஆனைவிழுந்தான் தி.கு இல்லம்
தேடுதம்மா உங்களை
இராணுவத்தோடு போராடி
மீட்டுத்தத்தீா் அக்காணியை
உங்கள் இறுதி நாட்கள் மகிழ்ச்சியானது
தியான நாட்களில் அமைதியாக இருந்தீா்
உங்கள் பகிர்வெல்லாம்
“எனக்குள்ளே எல்லாம் இயேசு”
நிறைவான வாழ்வு வாழ்ந்தாயம்மா
மண்ணக வாழ்வு முடிந்ததம்மா
விண்ணக வாழ்விற்காய்
சென்று வாருங்கள்
இப்புவியில் உள்ளவரை
உமை நாம் மறவோம்

சகோதரி எலிசபெத்.அ

# Saint Mother Teresa



"By blood, I am Albanian, by citizenship, an Indian, by faith, I am a Catholic nun. As to my calling, I belong to the whole world. As to my heart, I belong to the Heart of Jesus." - **Mother Teresa**

Mother Teresa of Kolkata is undoubtedly the most eligible religious known to have lived in the 20th Century. She has charmed the world through her simplicity, humility, prayerfulness and whole hearted free service to the poorest of the poor. She approached her mission of serving the poor with great respect and care because she was convinced that it was God's work. She would often say to her brothers and Sisters; "it is not your work but God's" and 'you are serving Jesus disguised and distressed in the poorest of the poor.'

On 10th September 1946, she listed to the voice of the Lord urging to the voice of the Lord urging her 'to be His light' and serve Him disguised in the poorest of the poor. Convinced of the call after two years of intense discernment, she responded concretely to the call of the Lord in the poor by leaving the secure and safe life of the Loreto convent, after 15 years of devoted service on August 17th 1948. From then on, the white blue bordered sari has become a symbol compassion, kindness and love world over the most visible face of the Good Samrithan of the century.

Leaving the Secure and peaceful atmosphere of the Loreto meant that it is possible to lead a religious life in its radical form of poverty by purely depending on Divine providence. The more the security and comfort, we will become deaf to the cry of God in the poor. The world which is accustomed to power and position was given an example of humility and service which could surpass all the worldly glory and dignity. Mother taught the world that it is possible to find great joy and happiness in austerity without any modern conveniences by just falling in love with Jesus. Fired by the love of Christ she ignited the world. Proclaiming God's love to the world especially to the poorest of the poor she endeared herself to the whole world. Her life, work and presence invigorated an enthusiasm and radical joy into the world and gave a new dimension to living out the Christian values based on the beatitudes and the gospel.

The congregation of the Missionaries of Charity was born to bring the personal love and care of God to the poor through tender loving care to the unwanted, uncared and the unloved. For Mother, serving the poor was a face –to-face encounter with Jesus and not just a social work of charity or a project. Serving the poor was a sacrament in which she would touch the broken body of Christ. So serving the poor was a privilege and honor that Jesus had gifted her and her work was 'contemplation in action.' Today the missionaries of charity is spread all across the world in more than 700 (including the brothers) communities. Whenever she opened a community she would say "I have opened one more tabernacle for Jesus." Which clearly manifests the orientation and purpose of her Mission.

Cheerfulness, loving trust, and total surrender to the Lord, simplicity, an annunciation attitude were the hall mark of her personality, Her solidarity with the poor and fervor for mission was rooted and centered on Christ through intense prayer and mortifications. Her closeness to mother Mary was very evident in her constant praying of the rosary and dedicating the congregation to her patronage. The strength for her mission derived from a strong faith nourished and renewed every day in the Eucharist. She would often say; "The Mass is the spiritual food that sustains

me – without which I could not get through one single day or hour in my life."

The life of Mother was a soothing balm for the aching and wounded world which was steeped in selfishness, division, Power – struggle and hatred. She walked in faith 'not to be successful but to be faithful' to the Lord and to share the joy of His gospel. She was cheerful in her sacrifices and service and all who encountered her also experienced the same joy that emanate from her union with the Lord. She would often say to those who met her, "Be Jesus to everyone you meet. And in everyone you meet, see Jesus."

Mother Teresa used every opportunity she got in life to magnify the Lord and to defend the poor. On receiving the Nobel Prize at Oslo in 1979 she said, "Christ makes himself the hungry one, the naked one, the homeless one and He says: 'You did it to me.' He is hunger for your elove, and this the hunger that you and I must find." Her pro-life stand was very cleat when she said, "I feel the greatest destroyer of peace today is abortion… if a mother can kill her own child, what is left for me but to kill you and to kill me?"

She did simple, ordinary, little things in her life like that of her patron Saint Theresa of Liseiux: 'doing little things with great love.' The little, frail, wrinkled frame of Mother embodied and justified her renown of sainthood in words, deeds and attitudes. Her works of charity endures works of charity endures with even greater tenderness and compassion through the many branches of Missionaries of Charity and thousands of volunteers from across the world from all walks of life and faith. Her whole life and personality could be summarized in her own words; "I don't claim anything of the work. It is his work. I am like a little pencil in His (God) hand. "This little instrument of God was beatified on 19$^{th}$ October 2003, and she was connoized as a saint on 4th of September 2016. We pray that the saint of our times may inspire us to follow her example and give many more saints to the church.

***Refer. : The New Leader***

# ஆசிரிய சகோதரிகளுக்கான கருத்தமர்விலிருந்து ....

வவுனியா திருக்குடும்பகன்னியர் மடத்தில் 08.08.2016 ஆசிரிய சகோதரிகளுக்கான ஒன்றுகூடல் நடைபெற்றது. ஆரம்ப நிகழ்வுவாக Power Point Presentation ஊடாக தூய ஆவியானவரின் ஆளுகையை வேண்டியும் இந்நிகழ்வை அர்ச்சித்து வழிநடத்தும் படியாக வேண்டிக் கொண்டோம். பின்னர் 19th General Chapter Opening Address Sent for mission…….if we don't dare now, then when? லிருந்து 3 வினாக்கள் தரப்பட்டு 10 குழுக்களாக்கப்பட்டோம்.

வினாக்கள் பின்வருமாறு:

1) What are the calls from the document?
2) What are the areas that the teaching sisters need to focus?
3) Draw an action plan for a focused teaching ministry?

விடைகள்:

1. We are called :-

– To move from words to action.
– To be responsible member
– To respond with the mind and heart of Christ.
– To be open to the signs of the times and discern where and how God's love must be expressed today.
– We as human beings can live in harmony.

2.

– ஆசிரியசகோதரிகள் தங்களுடைய ஆற்றல், நேரம், சக்தி அனைத்தையும் பாடசாலைமாணவரின் நலனுக்காக கொடுத்தல்.
– கனிவான வார்த்தைகளைப் பேசுபவராகவும்,
– நேர்மனப்பாங்கு உடையவராக இருத்தல்.
– அனைத்து மாணவரிலும் கரிசனையும் அன்பும் கொண்டிருத்தல்.
– எல்லா மாணவருடையவீட்டுச் சூழலையும் அறிந்திருத்தல்
– மாணவரின் உடல் நலனில் அக்கறை கொண்டிருத்தல்.

3.

– கல்வியில் பின்தங்கிய ஆரம்பப்பிரிவு (1-5) வகுப்பு மாணவர்களுக்கு ஆரம்ப அறிவை வளர்த்தல்.
– மேலதிக வகுப்புக்களை நடாத்துதல்.
– மாதத்திற்கு ஒரு தடைவை வகுப்பில் பரீட்சைவைத்தல்.
– மாதத்திற்கு ஒரு தடைவை மீளாய்வு செய்தல். இவ்வாறு பகிர்வுகள் இடம் பெற்றது.



மதிப்பிற்குரிய மாகணத்தலைவி அவர்களின் உரை எம்மை மாற்றத்திற்கு அழைப்பதோடு ஆழமான பதிலிறுத்தல், பணி, புதுப்பித்தல் என்பவை முதன்மைப்படுத்தப்பட்டன. ஆசிரிய திருக்குடும்ப சகோதரியாக பணிசெய்தல்,சாட்சியவாழ்வு வாழ்தல், தியாகவாழ்வு என்பது வலியுறுத்தப்பட்டமை எமக்கொரு மீள் அழைப்பாகவும் சவாலாகவும் இருந்தது.

வளவாளராக வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அன்ரன் சோமராஜா தனது உரையில்:

❖ காலத்திற்குகாலம் ஆசிரியசகோதரிகள் தம்மை இற்றைப்படுத்திக் கொள்ளல்.
❖ சமூகத்திற்கு ஒளியாகத் திகழ்பவர் ஆசான், எல்லோருக்கும் முன் உதாரணமாக துறவிகளாகிய நீங்கள் திகழ வேண்டும்.
❖ விசுவாச, அர்ப்பண, செபவாழ்வால் சாட்சியம் பகரவேண்டும்.

❖ இணைபாடவிதான செயற்பாடுகளிலும் ஈடுபட்டு பணிகளை பகிர்ந்து புதுமையை ஏற்படுத்துபவர்களாக படைப்பாற்றல் உள்ளவர்களாக திகழ வேண்டும்.

❖ உள்வெளித் தோற்றப்பாடுகள் ஆசிரிய சகோதரிகளின் வகிபங்கை வெளிப்படுத்தல் வேண்டும்.

அதன் பின் குறும்படம் ஒன்றுகாட்டப்பட்டது. அதில் வகுப்பாசிரியர் வகுப்பு மாணவனை உமக்கு ஒன்றும் தெரியாதவன் என ஒதுக்கிவைத்தார். படிப்பறிவு குறைந்த அந்த மாணவன் சித்திரப் போட்டியில் வெற்றி பெற்று தேசிய ரீதியில் பரிசு வாங்குகின்றான். படிப்பறிவு குறைந்த மாணவன் வேறு திறமைகளில் அவன் துலங்குவான். அவர்களை ஒதுக்கி வைக்காது தட்டிக் கொடுத்தல் வேண்டும்.

வளவாளராக அருட்தந்தை ஜெயபாலன் குரூஸ் இன்றைய நாட்டின் நிலைமைகள் தமிழர்களாகிய எமக்கு விடுதலை, சுதந்திரம் இன்னும் கிடைக்கவில்லை நீதி இல்லை நீதி சுரண்டப்படுகிறது. வியாபார நோக்கம், வீதி புணரமைப்பு என பல பாசாங்குகள் நடைபெறுகின்றன. நேர்மையை நீதியை தட்டிக் கேட்க முன் வர வேண்டும்.

மாகாண ஆலோசகர்களும் எங்களுடன் உடனிருந்து எங்களை இடைக்கிடை உயிர்த்துடிப்போடு அமர்வில் பங்கு கொள்ள உதவி செய்தார்கள். மாகாணத் தலைவி சில வினாக்களை எழுப்பினார்.

I. How do I dress up ……..?
II. How do I talk………..?
III. How do I respect myself…………?
IV. How do I treat my staff & sisters……?
V. How do I talk to outsiders………?
VI. How do I update myself………?
VII. How do I spent holidays…….?

Teaching is not a profession but குழுவால் அனுப்பப்படுகிறோம். திருக்குடும்ப சகோதரியாக துறவற ஆசிரியராக பாடசாலைக்கு அனுப்பப்படுகின்றோம். நாங்கள் எல்லோரும் பெறுமதியும் மதிப்பும் வாய்ந்த ஆசிரியர்கள் இதற்கு கடவுளுக்கு நாம் நன்றியுடையவர்களாக இருக்க வேண்டும்.

# இரக்கத்தில் இயேசுவைக் காணுதல்

நீங்கள் கடவுளால் தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள் அவரது அன்பிற்குரிய இறைமக்கள் எனவே அதற்கிசைய பரிவு இரக்கம், நல்லெண்ணம், மனத்தாழ்மை, கனிவு, பொறுமை ஆகிய பண்புகளால் உங்களை அணிசெய்யுங்கள். கொ.3:12-13

ரவி என்ற பார்வையற்ற இளைஞன் தன்னுடைய வாழ்க்கையை போக்க தனக்கு கிடைத்த அப்பிளை விற்பனை செய்ய புகையிரத நிலையம் சென்று அப்பிளை விற்பனை செய்த கொண்டிருக்கின்றான். அந்த வேளையில் அவசரமாக போய்க் கொண்டிருந்த ஒருவரின் கால்கள் அப்பிள் கூடையை வீழ்த்த அப்பிள்கள் எல்லாம் சிதறுண்டு போயின. அம் மனிதன் பாராமுகமாய் போய் விட்டான் அவ்வழியில் பலர் சென்றார்கள் ஆனால் ஒருவரும் இளைஞனை கருத்தில் கொள்ளவில்லை சற்றுநேரம் கழிந்த பின்னர் அவ் வழியே ஒருவர் வருகின்றார் அவ் இளைஞனையும் சிதறுண்ட அப்பிளையும் பார்க்கின்றார். உடனே தன்னுடைய பயணத்தை நிறுத்தி விட்டு அப்பிளை பொறுக்கி கூடைக்குள் போடுகின்றார். சிறிய தொகைப் பணத்தையும் கொடுக்கிறார். அப்போது அந்த இளைஞன் நீர் இயேசுவா? எனக் கேட்டார். அப்போது அந்த மனிதன் நான் இயேசு அல்ல எனக் கூறி அவ்விடத்தை விட்டு அகன்றார்.

சிந்தனைக்கு:

நாமும் எந்தளவுக்கு இயேசுவின் பண்புகளை எமதாக்கி குழுவில், பணித்தளத்தில், மாகாணத்தில், சபையில், திருச்சபையில் மறு இயேசுவாக வாழ்கின்றோம்.

"நீங்கள் சின்னஞ்சிறிய உங்கள் சகோதர சகோதரிகளுக்கு செய்வதெல்லாம் எனக்கே செய்தீர்கள்"

எம்மோடு வாழுகின்ற எமது சகோதரிகளிலும் ஒவ்வொரு மனிதர்களிலும் இயேசுவை காண்கின்றேனா!!

ஓரங்கட்டப்பட்ட வாழ்க்கையில் விரக்தியுற்று தவிப்போரில் வறுமையில் வாழ்வோரில் நோயுற்றோரில் இயேசுவைக் காண்கின்றேனா!!

அருட்சகோதரி. பௌலோஜினி

# My experience as a University Student

I am happy to tell you by the grace of God, how I was formed and grown from my mother's womb up to now. After birth I grew up slowly. I was a student for 13 years. Within those years, I lived my very best to be successful in life and studies and also another step to inter the university. Now that my desire is fulfilled. University seems to be a new world for me. Ragging started on the very 1st day I entered the university.



It seems to me that the seniors were waiting for this surprising day. It was a shocking one as I was so ignorant of what would happen there. I was frightened of their hidden plan, but I did not run away. As days passed, we were able to tolerate their behaveoir . We were urged to ask ourselves "Are these the life giving memories of the university life? Or are we going to run away from it? At the same time, we came to an understanding that whatever troubles us now, will help us to accept the critical situations in the future.

Here we are like babies in the midst of the final year students who are going to gratuate, regretting to leave behind their close friends, their beloved lecturers and the environment, with the hope that when time comes they will get into a bright future, we, ourselves are slowly getting into our daily duties of life,in the University.

The way the academic staff of the university and the students of the 2nd years are loving and treating us is raising within us a sweet melody to ask us whether the lectures would prolong their duty for some more years. We appreciated the way we were taught. After every lecture there are subject matters for research. So we understand the importance of research work. Unlike the earlier days, we search for more information about our subject matters by means of internet. We feel that this is a different way of getting knowledge within a short time. "Whatever happened it happened well" whatever is happening is happening well" "Whatever is going to happen it will happen" These are the expectations that rises in our young age as sweet memories. From the beginning, a university student should possess in him/her self love, good character and good personality. This is the deep desire of the chancellor, vice chancellor, dean of the faculties and all the lecturers. We will try our level best to make all these a reality.

**Miss. Imelda**
**Contact Stage**

# உன்னை அன்பு செய்யும் இறைவன்

இறை இரக்கத்தின் யூபிலி ஆண்டின் இறுதிப் பகுதியை அண்மித்துக் கொண்டிருக்கும் இவ்வேளை, தந்தை இறைவனின் இரக்கத்தின் முகமாக, வார்த்தையாகிய யேசுவும் மனமாகிய தூய ஆவியும் எம்மால் உணரப்படுகின்றார்கள். தொடக்கத்தில் இறைவன் உலகைப் படைத்த போது முடிவில்லாக் காலத்திற்கும் அசைவாடிக் கொண்டிருந்த தூய ஆவியார் இறை இரக்கத்தின் தொடக்க நிகழ்வாக முதல் வார்த்தை உச்சரிக்கப்படும் வரை செயல்படவில்லை. ஒளி தோன்றுக என்று இறைவனின் வாயிலிருந்து இயேசு என்னும் வார்த்தை வெளிப்பட்ட போது தான் தூய ஆவியின் செயற்பாடு தொடங்கியது. இன்றைய உலகில் கோடிக்கணக்கான மனிதர்கள் பயணச்சீட்டுப் (Flight Tickets) பதிவுகளைக் கைகளில் வைத்துக் கொண்டு நரகத்திற்கான நுழைவுச்(Visa) சீட்டுகளுக்காகக் காத்திருக்கின்றனர் பணம், புகழ், பாலியல் மோகம் போன்ற சாத்தானின் புகை இவ்வாறு காத்திருக்க வைக்கின்றது. சாத்தான் மட்டுமே எப்போதும் நரகத்தில் குந்தியிருக்க வேண்டும் எவரும் தப்பித் தவறியும் அங்கு போய்விடக் கூடாது என்று சித்தங் கொள்ளும் இறைவன், மனக் கடினத்துடன் உலகில் வாழும் பாவிகளை மனந்திருப்பவும், உத்தரிக்கும் நிலையில் அந்தரிக்கும் ஆன்மாக்களை அங்கிருந்து மீட்டுக் கொள்ளவும், உன்னையும் என்னையும் தனது அன்பின் நிமித்தமாகத் துன்புறும்படி அழைக்கின்றார்.

கிறிஸ்துவைத் தலையாகக் கொண்ட மறையுடலாகிய திருச்சபையின் அங்கத்தவர்களாகிய நாம் ஒருவர் மற்றவருக்காகத் துன்புறுவது இன்றியமையாததாகும். எனவே இறைவன் எல்லோரையும் குணப்படுத்துவதில்லை. ஏனெனில் குணமாகும் காலம் வரும் வரை பொறுமை, இறையன்பு, பிறரன்புடன் துன்புற ஒரு சிலரை அழைப்பதே உலகின் மேல் அவர் கொள்ளும் இரக்கமாகும்.

பணத்தின் மேல் பணம் சம்பாதிப்பதற்காக எத்தயோ பண முதலைகள் பாவ வாழ்வின் சுகபோகத்தில் மயங்கித் தமது ஆன்மாவை இழந்து விடுகின்றனர். இறைவனுக்கு மகிமை கொடுக்க மறந்து தனிமனித ஆராதனைகளையே முதன்மைப்படுத்துகின்றனர். அதாவது, அரசியல். பொருளாதாரம், தொழில்நுட்பம், கல்வி, கலை போன்றவற்றினூடாகத் தனிமனிதர்களின் சாதனைகள் போற்றப்பட்டு விளம்பரப்படுத்தப்படுவதனால் அழிந்து போகும் மனிதன்

மகிமைப்படுத்தப்பட்டு மனிதனே உலகின் தலைவனாகின்றான். இறைவன் மறக்கப்படுகின்றார்.எனவே, தான் படைத்த உலகை மீட்க இறைவன் தனது ஒரேபேறான மகனையே எமது கையில் தந்துள்ளார். ஒவ்வொரு திருப்பலியிலும் அந்த மகனை நாம் கொன்று(பலியிட்டு) சாப்பிடும்(தனக்கு விருப்பமான ஒரோயொரு பலிப்பொருளாகிய மகனோடு சேர்த்து எம்மையும் ஏற்கும் இறைவன் அவரையே உண்ணத் தருகின்றார்.) அந்தளவிற்கு எமது பாவங்கள் மிகுதியாக உள்ளன. மகனின் பாத்திரம் நிரம்பி வழிகின்றது என்று பாத்திமாவில் மரியன்னை சுட்டிக்காட்டிய பாவப்பெருக்கத்தின் காரணமாக, உலகின் ஒவ்வொரு மூலையிலும் சங்கிலித் தொடர் போல வசீகர வார்த்தை(மகன்) உச்சரிக்கப்படும் போது இறை (உள்ள)மனமாகிய தூய ஆவி செயற்பட்டு அர்ச்சிக்கின்றார். திருப்பலியினூடாகப் பாவப்பரிகாரமும் நன்றியறிதலும் நிகழ்கின்றது. ஏனெனில் இறைவன் சிலுவையில் வெளிப்படுத்திய, எக்காலத்திற்கும் ஏற்கெனவே மறைவாயிருந்த இரக்கத்தின் திட்டத்திற்கு நன்றி கூறக் கூடிய(திருக் கிண்ணத்தைக் கையிலேந்தி இறைபுகழ் கூறுதல்) ஒரேயொரு விடயம் உன்னத செபமாகிய திருப்பலியே ஆகும்.

இறைவன் எமது குற்றங்களுக் கேற்ப எம்மைத் தண்டிப்பவரல்ல. இறைவன் அன்பாக இருக்கிறார். (God is Love) என்பதைச் சிலர் இன்று பிழையாக விளங்கிக் கொள்கின்றனர். அன்பே கடவுள் (Love is God) என்று திரிவுபடுத்துகின்றனர். ஒருவர் மற்றவரை அன்பு செய்வதே போதும், இறைவனைப் பற்றிய அறிவோ, மறைபொருட்களின் வெளிப்பாடோ, திருவிவிலியமோ, திருச்சபையோ, திருவருட்சாதனங்களோ, திருப்புகழ்மாலையோ, தேவையில்லை என்கின்றனர். கடவுள் அன்பாக இருக்கிறார்,(Spiritual Mysticism)என்பவர்களோடு நாம் மகிழலாம். ஆனால் அன்பே கடவுள்(Secular Mysticism) என்பவர்களோடு நாம் கவனமாக இருக்க வேண்டும். ஏனெனில் அன்னை தெரேசாவையும், அவிலா தெரேசாவையும் இயக்கியவர் நற்கருணை ஆண்டவர் தான். எனவே அன்பின் அருட்சாதனங்களாகவும், இறை இரக்கத்தின் வாய்க்கால்களாகவும், நற்செய்தியின் தூதுவர்களாகவும், நற்கருணையின் பிரசன்னங்களாகவும், வாழ்ந்து இறைவன் உன்னை மன்னித்து அன்பு செய்கின்றார் என்று அறிக்கையிடுவோம்.

Fr. Antonibala

# அர்ப்பணம்- ஒன்று கூடல்-
# நிறுவுனரின் நாம விழா நிகழ்வு

ஆனி 24ம் நாள் அன்று எம் தன்னாமுனை,தாண்டவன்வெளி, ஜெயந்திபுர குழுவினருக்கு ஒரு மகிழ்வான நன்நாளாகும். பல மாத ஆயத்தத்தின் பின் மூன்று குழுவில் இருந்தும் 15 பேர் அருட்சகோதரி அலிஸின் வழிகாட்டுதலில் தம்மை அர்ப்பணத்திற்கென ஆயத்தப்படுத்தினர். மூன்று குழுக்களையும் நேரில் தரிசித்து ஒவ்வொருவருடனும் தொடர்பு கொண்டு, அவர்களைத் தயார்படுத்தினார். அர்ப்பண நாள் அன்று அருட்பணி இக்னேசியஸ் இன்னாசி யோசவ் (திருக்குடும்ப குரு)அவர்களால் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு "உண்மையான திராட்சைச் செடி நானே" (யோவா 15/1-15) என்ற நற்செய்தி மறையுரையுடன் 15 பேர் தமது இறுதி அர்ப்பண வார்த்தை பாட்டை அறிக்கையிட்டனர். எம் பியன்வெனு குடும்பத்தில் நெருங்கி, இணைந்து, விருந்துண்டு, மகிழ்ந்த, மகிழ்வான நன்நாளில் ஏனைய 3 குழு அங்கத்தவரும் ஓசான்னா குழுச் சகோதரிகளும் பங்கு பற்றி சிறப்பித்தமை இன்னும் இரட்டிப்பான மகிழ்ச்சியைத் தந்தது. அவ்வேளையில் "சகோதரர் ஒன்றுபட்டு வாழ்வது எத்துணை இனியது" என்ற திருப்பாடல் எம்மை மகிழ்வோடு நன்றிப்புகழ் இசைக்கச் செய்தது.



பிராந்திய ஒன்று கூடல்

அர்ப்பணவிழா நாளை தொடர்ந்து ஆனி 25ல் தேசிய தலைவி சகோ. நேவிஸ் அவர்கள் Family on Mission பற்றி உரோமில் இடம் பெற்ற மாகா நாட்டில் குடும்பம் ஒரு கொடை பற்றிய செய்தி தொகுப்பை விரிவாக தெளிவுடன் விளக்கம் தந்தார்கள். இதன் மூலம் எங்கள் சபை வாழ்வின் வீழ்ச்சி, எழுச்சி, சவால்கள் பொது உருவாக்கம் ஒன்று இணைதல், குடும்பம் பற்றியவை கேட்டு புத்துயிர் பெற்றோம். இதில் மூன்று குழுவினரும் இணைந்து குடும்ப உறவுடன் ஒன்றிணைந்து செயற்பட்டு அருங்கொடையான ஐக்கியத்தை வாழ உணர்ந்து செயற்பட வேண்டிய கடமைப்பாட்டையும் பெற்று உள்ளோம்.

எம் நிறுவுனர் விழா

ஆனி 29ல் எம் நிறுவுனரின் நாம விழாவை காலை திருப்பலியுடன் தொடங்கி மாலை மகிழ்வின் செபத்தின் நாளாக செலவிட்டோம். காலை திருப்பலியை தாண்டவன்வெளி பங்கு தந்தை அருட்பணி அலெக்ஸ் றொபட் தலைமையில் தாண்டவன்வெளி, ஜெயந்திபுரம், தன்னாமுனை பங்கினர் ஒன்று இணைந்து சிறப்பித்தனர். எம்மோடு அருட்பணி மொறாய்ஸ் (திருக்குடும்ப குரு) அவர்களும் இணைந்து அன்பின் விருந்திலும் கலந்து கொண்டர்.

மாலையில் 2 குழுக்களுடன் விடுதிச்சாலை மாணவரும் ஒன்றிணைந்து நற்கருணை வழிபாட்டின் மூலம் ஆசீர் பெற்று இறைவனை மகிமைப்படுத்தி நன்றி கூறினோம்.விழாவை சிறப்பிக்க ஓசான்னா குழுச் சகோதரிகளும் எம்முடன் இணைந்து எம் மகிழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

"இறைவனுக்கே மகிமை"

தாண்டவன் வெளி
பொது நிலையினர்.

# புதிய உலகக் கண்ணோட்டத்தில் பிரபஞ்சம்

பிரபஞ்சத்தில் நாங்கள் இறைவனின் அன்புக் கொடைகள். பிரபஞ்சத்தில் வாழும் அனைவரும் அன்பின் செயற்பாடுகளினால் படைக்கப்பட்டவர்கள். கடவுளின் அன்புபே படைப்பைப் பாதுகாத்து, வழிநடத்திக் கொண்டு வருகின்றது. படைப்பிற்கும், மனிதனுக்குமுள்ள வித்தியாசம் அனைத்துப் படைப்புக்களும் ஐந்தறிவு கொண்டதாகச் செயற்பட்டுக் கொண்டு வருகின்றது. ஆனால் மனிதன் மட்டும் தானாகவே இவ்வுலகில் செயற்படுகின்றான். இந்தப் படைப்பை நாங்கள் ஆழமான முறையில் அறிந்து கொள்வதற்கு இறைவனின் ஒளியின் சக்தியினால் இப்பிரபஞ்சத்துடன் இணைந்து வாழ அழைக்கப்படுகின்றோம்.

நாம் பெற்றுக் கொண்ட ஒளிச் சிதறல்கள் எட்டுத் திக்குகளிலும், பதினாறு கோணங்களிலும், உலகம் முழுவதிலும் வார்த்தையால் ஒளி வீசிக் கொண்டிருக்கின்றன. இந்த உலகம், இந்த ஒளியில் வாழ வேண்டுமென்று உயிர் கொடுத்துக் கெண்டிருக்கின்றது. மனிதன் தன் வாழ்வின் அர்ப்பணத்தை இறுதியாக வாழ முயன்றால், கிறிஸ்துவைப் போல துன்பங்கள், பிரச்சனைகள், கஸ்டங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

பிரபஞ்சம் இதற்கு விதிவிலக்கல்ல. வெட்டப்படுகின்றது. எரிக்கப்படுகின்றது. தேவைக்கேற்ப அழிக்கப்படுகின்றது. ஆனாலும் படைப்பு விருத்தி செய்யப்பட்டுக் கெண்டே இருக்கின்றது. துன்பங்கள் வளர்ச்சியை, நிறைவை, மகிழ்வை, நம்பிக்கையை, தியாகத்தைத் தருகின்றன. அனைத்தும் ஒளியின் சக்தியினால் வாழ்வடைகின்றன. அன்பு சக்தி ஈர்க்கின்றது, புதியன அடைவதற்கும் இயக்காற்றல் தருகின்றது.

இறையியலின்படி எமது இருத்தல் எப்படி வந்தது? வாழ்வின் அடிப்படையான சக்தியால்தான் வந்தது. அன்பின் வெளிப்பாடுதான் எம்முடையவும் பிரபஞ்சத்தினுடையவும் சக்தி. எமது வாழ்வின் ஆதாரமாகவும், அடிப்படையாகவும் இருப்பது அன்பு. கருவூலங்களை நான் பெற்றிருக்கின்றேன். எமது வாழ்க்கையில் அதனை வாழ இன்று அழைக்கப்பட்டிருக்கின்றேன். எமது வாழ்வில் இரண்டு தீய சக்திகளை நான் காண்கின்றேன். ஏமாற்றம், திருடுதல். ஆணிவேர் கொண்ட அன்பு எம்மிடம் இல்லாதபடியால் இவை காணப்படுகின்றன. பெரியார் ஒருவர் கூறுகின்றார், “புதுவாழ்வு- மரம், பறவை இவற்றைக் குறிக்கின்றது.

ஒருவர் ஒருவரைவிட வித்தியாசப்பட்டவர்கள். ஒன்றிணைப்பு ஒன்றாக இணைந்து வாழ்வது. நான் இறைவனின் கொடை, படைப்பின் தொடர்பு, புதியவிதமான உறவு , தெய்வீக குணம் என்பன என்னில் உண்டு. செபம் பிறர்அன்பு, தாழ்மை, செவிமடுத்தல், நான் என்ற நிலையில் இருந்து என்னை மறந்து வாழும்போது தெய்வீக குணங்கள் என்னில் இருக்கின்றன. இத்தெய்வீக சக்தியானது உள்ளொளியில் இருந்து வெளிப்பட வேண்டும்.

அன்பின் சக்தியானது, எமது குழுமங்களில், பங்குகளில், சமுதாயங்களில் செயற்பட தெய்வீக சக்தி எம்மை அழைத்துக் கொண்டே இருக்கின்றது. முதிர்ந்த வயதில் இருக்கும் சகோதரிகளுக்கு புதிய பிரபஞ்சத்தைப் பற்றியும், குழுவாழ்வு பற்றியும் சிறப்பான முறையில் வார்த்தைகளை வாழ்வாக்கிக் கொள்ளத் தங்களை மனமுவந்து அர்ப்பணித்த அன்பிற்கும், மதிப்பிற்குமுரிய இரண்டு சகோதரிகளுக்கும் தியானத்தில் இணைந்து கொண்ட அனைத்துச் சகோதரிகள் சார்பிலும் எம் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

"அன்பே கடவுள், அன்பே சக்தி"

தியானத்தில் பங்கு கொண்ட
மூத்த சகோதரிகள்.



# இறை இரக்கத்தை தன் வாழ்வின் பணியாக வாழ்ந்தவர் எமது நல்ல பிதா

பீற்றர் பியன்வெனு நோஆய் பிறப்பிலேயே ஒரு நிறுவுனர் இவர் தனது இளம்பிராயத்திலே மறையறிவின் மட்டில் அதிகம் அசட்டைத் தனம் நிறைந்த வராகக் காணப்பட்டார். பியன்வெனு குருவாக வரமுன் அவருடைய தாயார், மகனே! நீர் இறைவனிலிருந்து தூர விலகிச் செல்வதற்கான காரணத்தை உமது அன்னைக்கு கூறும் என்றாள். நோஆய் ஒரு நாள் மாலை வேளையில் புனித அந்திரேயா ஆலயத்தில் செபித்துக் கொண்டிருக்கும்போது, பியன்வெனு ஓர் ஆழமான இறை அனுபவத்தைப் பெற்றதாக தெரிகிறது. இவ்வுலகை விட்டு விலகியவர் போல்



அவர் இறைவனின் அன்பை உணர்ந்ததோடு
ம் இறைவனின் இரக்கத்தினால் மன்னிக்கப்பட்டு
கொண்டார்.

ருமுறை லோரண்டு எனும் இடத்தில் நெருப்புச்
விட்டு எரிவதைக் கண்டார். அவர் அந்த
று, அங்கு தண்ணீர் ஊற்றி அணைத்துக்
ள ஒரு முதியவர் காணாமற் போனாரென்று
த புகை மூட்டத்திலிருந்து தூக்கி எடுத்தார்.
த்திலுள்ள சிற்றாலயத்திற்கு சென்று செபித்துக்
கொண்டிருக்கும் போது, மரியன்னை குழந்தை இயேசுவைக் கையில் ஏந்திய வண்ணம் காணப்பட்டார். “நான் அவருடைய குரலைக் கேட்டேன், அவள் என்னை அழைத்தாள், வழிகாட்டினாள், நான் அனைத்தையும் புரிந்து கொண்டு ஒப்புரவு அருட்சாதனத்தை பெறச் சென்றேன். அந்நேரம் இறைவனின் அளப்பரிய இரக்கத்தை உணர்ந்து கொண்டேன்.

இன்னும் கை விடப்பட்ட பெண்களுக்கு ஆறுதல் அளித்து அவர்களை பாதுகாப்பதெற்கென ஒரு பணியை ஆரம்பித்தார். பீற்றர்

பியன்வெனு யூலாலி ஆலயத்திலிருக்கும் போது, இரந்து வாழும் தம்பதியினரைத் தன்னுடன் தங்குவதற்கு அழைத்தார். அவர்களுக்கு உணவைப்பகிர்ந்து அளித்தார். இவர்கள் இரந்து வாழும் வாழ்விலிருந்து தடைசெய்யப்பட்டனர். தான் பரிசுக்கு செல்லும் போது தனது சகோதரி கத்தறினிடம் அவர்களைக் கவனிக்கும் படி ஒப்படைத்தார்.

1821ம் ஆண்டு தாங்க முடியாத குளிரின் போது போர்டோவிலுள்ள ஏழைகளுக்கு அத்தியாவசியப் பொருட்கள் தேவையாயிருக்கும் போது, அவர் ஒரு கைவண்டியை தள்ளிக் கொண்டு வீதிகள் எங்கும் சென்று, அவர்களுக்குத் தேவையான பொருட்களைச் சேர்த்து, அவற்றை ஏழைகளுடன் பகிர்ந்தார்.

புற்று நோய் முற்றிய நிலையில் ஒரு பெண்ணிடம் முதல் முதலாக அழைக்கப்பட்டார். இவளது நோயினால் அறையில் துர்நாற்றம் வீசியது. அவளுக்கு அருட்சாதனங்கள் வழங்கினார். முன்னும் ஒருதொழு நோயாளியான பெண்ணிடம் சென்ற போது அவள் முற்றிலும் தனிமையில் வீசப்பட்டதைக் கண்டார். அப்பெண் ஒப்புரவு அருட்சாதனம் பெற விரும்பியமையால், அவர் அவளது சிதைந்து போன முகத்தினருகே குனிய வேண்டிய நிலை ஏற்பட்டது. அவள் இறக்கும் வரை அவளை சந்தித்த போது அவளை படுக்கையிலிருந்து தூக்கி, இருத்தி, அவளுக்கு இலகுவான தன்மையையும் ஆறுதலையும் அளித்தார்.

படைத்தளபதியாக இருந்த ஒருவரை ஒரு பெண் அருட்பணியாளரிடம் அழைத்து வந்தாள். அவன் தான் திருப்பணியாளரைப் பார்ப்பதில்லையென்றும் கண்டிப்பாக கட்டளையிட்டதுடன் தான் இறக்கும் தருவாயில் இருந்தால் கூட திருப்பணியாளரை அழைக்கக் கூடாது என்றும் அவர்களுக்கு எச்சரிக்கை விடுவித்திருந்தார். அருட்பணி நோஆய் நாளாந்தம் அவர் இல்லத்திற்கு சென்றதினாலே அவர் மனம்மாறி, அவரிடம் நற்கருணையைப் பெற்று, அருட்சாதனத்தையும் பெற்றுக் கொண்டார்.

எமது ஸ்தாபகரின் வாழ்க்கையின் செயற்பாடுகள் யாவும் மனுவுருவான கிறிஸ்துவின் இரக்கத்தையே சார்ந்திருந்தது அவரது இரக்கம் எவ்வித விதிவிலக்குமின்றித் தான் பணி செய்த இடமெல்லாம் பிரதிபலித்தது.

அருட்சகோதரி அனஸ்ரேசியா

## Hope is a reality to keep the faith, that you will survive and be alive…

Blessed are the merciful, for they will receive mercy" (Matt 5:7). In the year of mercy, the unit leadership team, and as Holy we the Family sisters have taken the initiative to be merciful to those who do not experience solace coming from outside. In search for our better response we came across Tellippalai hospital where there are patients who need our concern and care. There is only one doctor to attend to these patients, he visits them twice a week. Due to the scarcity of physicians, those patients who come from far off places as well those from close by are compelled to wait for hours and hours. They have to wait in a que, from where they cannot move as their place would be taken on by other patients. These people-most of them come from distance places, leaving their homes very early in the morning, just to get first in the line, and very often without food or drink until evening. There is no canteen either in the surrounding. If they have some money with them, they use that for the travelling and medicine but not for the food due to their poverty. Sometimes it is not sufficient for them to manage. The main cause of such sacrifice is in order to consult the doctor to know the life span of the patients.



We realize that we need to commit ourselves to feed them by giving food items to fill their hungry stomach

on clinic days. Sr. Arul and Sr. Theophane were there for the initiation of this service on Ash Wednesday in 2016 to the clinic patients from Tellippalai hospital. They went to see the places and had dialogue with the doctors and the authority to organize something. After few days the IIavalai community took over this responsibility. “Jesus said I was hungry you gave me food”. We also meet the patients who come for therapy and blood transfusion. We console them, show them in different ways our concern and care.

During these visits, we listen to their sad stories and pray for them. It is very heart breaking to know some patients whom we met the previous week had passed away. The next time we don’t see or meet them. When the head of the family is sick and admitted in hospital, the family suffers in various ways for food, studies, protection and life itself. Some children stay as a bystanders with the father or brother, stop going to school and some lose their job. We spent more time with the youth who are sick. By being with them and listening to them we give them courage, and hope for their survival. Although medical science and technology keep on improving fast, this social problem continues to remain the same. Our intention is to improve their conditions by our efforts. To choose life today calls us to a change in a new way of relating to God, to humanity, to earth and to all of creation. As Holy Family sisters, we have decided to do our best to render this kind of service, and to accommodate the young in our boarding houses for studies.



I end up here with the words of our founder PBN “Don’t separate yourselves from those who are under common Law…. Accompany them on their journey, support them in their stages” and St. Mother Theresa’s “When I see the Eucharist I see my suffering people; when I see the suffering I see the Eucharist in them”. May God help us to find ways and means to fulfill our desire to work for the poor and the needy especially in the year of Mercy.

Sr. Amali. F

அன்பான உறவுகளே!!

எமது தகவற் சேவைக்கென நீங்கள் அனுப்பிய ஆக்கங்கள், ஒத்துழைப்புகளுக்காக எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு, எம் சபையின் ஐந்து கிளைகளின் அனுபவ ஆக்கங்களை ஒன்றாகத் தாங்கி வெளியாகின்ற 'குடும்ப உறவின் சங்கமம்' பற்றிய உங்களது ஆக்கபூர்வமான கருத்துக்கள் ஆலோசனைகள், ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்.

அடுத்த சங்கம இதழுக்கான உங்கள் படைப்புக்களை **30.10.2016** இற்கு முன்னர் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் படைப்புக்கள் பின்வரும் கருப்பொருளின் மையமாக அமையட்டும்.

- **இயேசு பிறப்பு கொண்டாட்டத்தின் அர்த்தம் என்ன?**
  - கிறிஸ்து பிறப்பும் மனித நேயமும்
  - இறை இரக்கமும் இறைவனின் பிறப்பும்

- **மரியின் மைந்தன் எங்ஙனம் மெசியாவானார் ?**

- **இயேசுவின் கனவும் கத்தோலிக்க சமயமும்**

**உங்கள் தொடர்புகளை விரைவாக்கி, எமது சேவையை இலகுவாக்குங்கள்:**

மின்னஞ்சல் முகவரி:

**sangamuminfo@gmail.com**

மெகா பதிப்பகம்
கச்சேரியடி யாழ்
021 221 7939